விலை ரூபா 1:25


# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 67 புரட்டாதி 4 முறை 4 இதழ் 228
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 20-9-1985


## கூட்டுமுன்னணி-இந்திய அரசு தொடர்ந்து ஆலோசனை

(புதுடில்லி)

இந்திய அரசு தரப்பினருக்கும்-ஈழம் தேசிய விடுதலை முன்னணித் தலைவர்களுக்குமிடையிலான ஆலோசனைப் பேச்சுவார்த்தைகள் நேற்றும் தொடர்ந்து இடம்பெற்றன.

இந்த ஆலோசனையில் போர் நிறுத்த உடன்பாட்டை பலனுள்ள வகையில் அமுலாக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ரா)

## மட்டக்களப்பில் துப்பாக்கிசூடு: பலர் கொல்லப்பட்டனர்

(மட்டக்களப்பு) மட்டக்களப்பு ஈரலக்குளம் என்னும் கிராமத்தில் ஆயுதப் படையினர் சோதனையிட்ட போது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பொதுமக்களில் பலர் மரணமானதாகக் கூறப்படுகிறது.

நேற்று முன்தினம் இச்சம்பவ (5-ம் பக்கம் பார்க்க)

[illegible] கிளை நூலகம்

# சனப் பெருக்கத்தை குறைக்க ஊர்காவல்படை அமைப்பு!

## பாராளுமன்றத்தில் 'சரத்' தெரிவித்த அச்சம்!

(இ. பெஞ்சமின்)

"நாட்டின் சனப் பெருக்கத்தைக் குறைக்க, ஊர்காவல் படை அமைக்கப்பட்டிருக்கிறது. நல்லது அவர்கள் பலரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொல்கின்றனர். ஒரு சிலர் தம்மைத் தாமே சுட்டுக் கொள்கின்றனர். ஊர்காவல் படையினர் இராணுவத்தினருக்கு இடைஞ்சலாகவே உள்ளனர்."

பாராளுமன்றத்தில் கலவானை எம். பி திரு. சரத் முத்தெட்டுவேகம நேற்று உரையாற்றுகையில் மேற்கண்ட அச்சத்தைக் கிளப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"1983ம் ஆண்டு ஜூலை மாதம் இடம்பெற்ற இனக்கலவரங்களைப்படுத்து இந்த அரசுக்கு நாட்டை நிர்வகிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஓர் அமைப்பின் உறுப்பினர் ஒருவர் என்னை அண்மையில் சந்தித்தார். இந்த அமைப்பு இலங்கை இனப் பிரச்னைபற்றி ஒரு புத்தகம் எழுதியுள்ளது. 1983 ஜூலைக் கலவரத்தின் போது தேர்தல் வாக்காளர் பட்டியலை எடுத்துக்கொண்டு தமிழர்களின் வீடுகளைத் தேடித் தேடித் தாக்கியதாகத் தகுந்த சாட்சியங்களுடன் அந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது.

அரசியலமைப்புக்கு 6-வது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டதனால் தமிழர் விடு [5 ம் பக்கம் பார்க்க]

### ஊர்காவல் படை வீரர் பலி

(திருகோணமலை)

திருகோணமலையிலுள்ள மொறவெவ என்னும் இடத்தில் இனந்தெரியாதவர்களுக்கும் ஊர்காவல்படையினருக்குமிடையே இடம்பெற்ற மோதலில் ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். இருவர் படுகாயமடைந்தனர். (ரா)

### இருவர் கைது

(மதவாச்சி)

லொறி ஒன்று கடத்திச்செல்லப்பட்டது சம்பந்தமாக, ஊர்காவல்படையைச் சேர்ந்த இருவர், மதவாச்சிப் பொலிசாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்தவாரம் மதவாச்சியில் (5 ம் பக்கம் பார்க்க)

## அகதிமுகாம் சம்பவம்: 'உமா' கண்டனம்



(யாழ்ப்பாணம்)

"81ம் ஆண்டு இஸ்ரேலியர்கள் இரு பாலஸ்தீனிய முகாம்களிலிருந்த பாலஸ்தீனியர்களைக் கொலைசெய்ததுபோல் இலங்கை அரசும் திருகோணமலை அகதிகள் முகாமிலிருந்த தமிழர்களைப் படுகொலைசெய்துள்ளது" என்று தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) செயலதிபர் திரு. உமா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

'தமிழீழத்தின் குரல்' என்ற தமது இயக்கத்தின் வானொலிச் சேவையில் திரு உமாமகேஸ்வரன் உரை நிகழ்த்துகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், இஸ்ரேலின் மொசாட், அமெரிக்க உளவு ஸ்தாபனமான சி. ஐ. ஏ. பிரிட்டிஷ் எஸ். எஸ். ஓ. ஆகியவற்றின் கலிப்படைகளின் உதவியுடனேயே இலங்கை அரசு வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டுவருவதாகத் தெரிவித்தார்.

அகதிகள் முகாமில் கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்கும் அவர் தமது இயக்கத்தின் சார்பில் அனுதாபம் தெரிவித்தார். (மா)

## அரிசி ஆலையில் இளைஞர் கைது

[வவுனியா]

வவுனியா - கண்டி வீதியில் உள்ள ஒரு அரிசி ஆலையில் திருவாக மேற்பார்வையாளராகக் கடமையாற்றிய யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த 26 வயதான 'ரஞ்சன்' என்ற அழைக்கப் (5-ம் பக்கம் பார்க்க)

## ஈ. தே. முன்னணியின் கோரிக்கையை இலங்கை அரசு ஏன் நிராகரிக்கவேண்டும்

### கூட்டணி கேட்கிறது

[சென்னை]

"மூன்றுமாத போர் நிறுத்த உடன்பாட்டுக் காலத்தில் இலங்கை இராணுவத்தினராலும், ஆயுதமேந்திய சிங்களவர்களாலும் 500க்கு மேற்பட்ட தமிழர்கள் கொலைப்பட்டுள்ளனர். இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் தமது வீடுகளை இழந்துள்ளதுடன் அவர்களுடைய சொத்துக்களுக்கும், வர்த்தக நிலையங்களுக்கும் பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. திருகோணமலையில் மாத்திரம் 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்."

சென்னையில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் இரண்டு நாள் அரசியற் குழுக் (பொலிட்பீரோ) கூட்ட முடிவில் நேற்று விடுக்கப்பட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(5-ம் பக்கம் பார்க்க)

## பூரண சுகத்துடன் எம். ஜி. ஆர்.

[சென்னை]

மதுரையில் தற்போது தங்கியிருக்கும் தமிழக முதல்வர் திரு எம். ஜி. ராமச்சந்திரன் காய்ச்சல் தணிந்து பூரண சுகத்துடன் இருப்பதாக அறிவிக்கப்பட்டது. (ரா)

## "'தொண்டா' பிறந்தநாள் புத்தகம் நாட்டின் பாதுகாபபுக்கு அச்சுறுத்தல்!"

(கொழும்பு)

"கிராமியக் கைத்தொழிற்துறை அமைச்சர் எஸ். தொண்டமானின் பிறந்த நாள் தொடர்பாக வெளியாகியிருக்கும் புத்தகம் எமக்கு அச்சுறுத்தலாக இருக்கிறது. இதனை இந்த அரசாங்கம் ஏன் கவனிக்கவில்லை?"

இவ்வாறு அத்தனகலை எம். பி திரு லக்ஷ்மன் ஜெயக்கொடி நேற்று பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

வர்த்தக, கைத்தொழில் நிறுவனங்களின் பாதுகாப்பு அமைச்சுக்கான குறைநிரப்பு விவாதத்தில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கேட்டார்.

"தமிழ் மக்களுக்குப் பாரம்பரிய பிரதேசங்கள் உண்டு என்று இந்தப் புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது. இது நாட்டின் பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது" என்றும் அவர் தெரிவித்தார்.

## மாவைப் பகுதியில் வளவுகளில் வந்துவிழும் மர்மக் குண்டுகள்!

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரத்தில் மர்மமானமுறையில் வீட்டுவளவுக்குள் வந்து விழும் குண்டுகளால் இப்பகுதி மக்களிடையே பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

மாவிட்டபுரம்-கீரிமலை வீதியில் உள்ள வளவு ஒன்றிற்குள் ஞாயிறு பிற்பகல் குண்டு ஒன்று வந்து விழுந்து வெடித்ததாகவும் அதற்கு அடுத்த வளவிற்குள் திங்கள் பிற்பகல் மற்றொரு குண்டு ஒன்று வந்து 5 [illegible]

## கொழும்பு-யாழ். தபால விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு நேற்று கொழும்புத் தபால் பைகள் வரவில்லை.

யாழ்ப்பாணத்திலிருந்தும் தபால் பைகள் நேற்று அனுப்பப்படவில்லை.

(5-ம் பக்கம் பார்க்க)

## பப்பைமடுவில் 4 கடைகளும் கோயிலும் தீக்கிரையாகின!!

[வவுனியா]

வவுனியா - மன்னார் வீதியில் பப்பைமடு என்ற இடத்தில் நான்கு கடைகளும் ஒருபிள்ளையார் கோவிலும் எரிக்கப்பட்டுள்ளன.

போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டதின் பின்னர் ஏற்பட்ட முதலாவது சம்பவமாகும்.

(5ம் பக்கம் பார்க்க)

# அ. விளம்பரம்

## விற்பனைக்கு

கொக்குவில் குளப்பிட்டி- ஆனைக்கோட்டை வீதியில் உயரப்புலம் பிள்ளையார் கோவிலுக்கு மிக அண்மையில் சகல வசதிகளுமுள்ள 3 பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- அசோகா போட்டோ, இல: 225, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 816

## தேவை

பண்டத்தரிப்பில் பிரத்தியேக வகுப்புகள் நடத்துவதற்கு உகந்த வீடு, போக்குவரத்துடன் தேவை. தொடர்பு: விளம்பர இல 757 C/o ஈழநாடு. யாழ்ப்பாணம். 757

ஹைடில் லேர்த் சிலிண்டர் மெஷினில் வேலைசெய்யக் கூடியவர்களாம். அக்கக்கோப்பாளர்களும் தேவை. ஐந்து வருடங்கள் அனுபவம் வேண்டும். மெஷின் வேலைசெய்பவர் கலர் லேபல்களில் நல்ல அனுபவமும் உள்ளவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பிக்கவும். விளம்பர. இல: 8 9 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 819

கொப்பரு, வேப்பம் விதை ஆகியவை உடன் தேவை. நேரில் கொண்டுவரவும். நல்ல விலை வழங்கப்படும். மல்ரி-ஒயில் இன்டஸ்றிஸ் லிமிட்டட். காங்கேசன்துறை வீதி. இணுவில். தொலைபேசி: 339 (சுன்னாகம்) 800

பாதுகாப்பு சேவை செய்வதற்கு அனுபவமும், நல்லொழுக்கமும் உள்ளவர் தேவை. சகல விபரங்களுடனும், நற்சான்றிதழ்களுடனும். விண்ணப்பிக்கவும். விளம்பர இல; 820 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 820

### பயிற்சி

தையல் தொழில் நிலையம் நவாலி சித்தரமணிப்பிள்ளையார் கோவிலுக்கு அருகிலுள்ள அற்புதமனை கட்டிடத்தில் ஐப்பசி மாதம் 5ஆம் தேதி காலை 9மணியளவில் ஆரம்பிக்கப்படும். பழகவிரும்புபவர்களும் வேலைசெய்யக் கூடியவர்களும், படிப்பிக்கும் திறமையுள்ளவர்களும் கீழ்க்காணும் முகவரிக்கு இம்மாதம் 26ஆம் தேதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும். திருமதி வனிதா சிவரத்தினம், அற்புதமனை நவாலி தெற்கு. மானிப்பாய். 804

## விற்பனைக்கு

றேடியோ, கட்டில், பெட்டகம் மற்றும் பழைய புத்தகங்கள்; தொடர்பு "ESTY", 33, முதலாம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம்; 8?

### சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

பெரிய அரசடி சாவகச்சேரி காலம்சென்ற நாகமணி யோகராசா பெண் சாந்தினி (சரவணை மகள்) என்பவரின் மரண சாதனமில்லா மரணச்சொத்தும் உடமைப் பொருட்களினதும் விடயத்தில்.

மரணமெய்தியவர்.
நாகமணி யோகராசா,
பெரிய அரசடி, சாவகச்சேரி,

மனுதார்

இல: 229
சொத்துறுதிசார்

எதிராக

1; யோகராசா மகள் சுதர்சனு (பராயமற்றவர்)
2. யோகராசா கௌரி நிதார்சன் (பராயமற்றவர்) அவர்களின் வழக்குக் காவலன்.
3. சரவணை நாகமணி மூலமாக-எல்லோரும் பெரியஅரசடி, சாவகச்சேரி.

எதிர்வாதிகள்

### பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

மேற்படி வழக்கு மேற்கூறப்பட்ட இறந்தவரின் மரணச் சொத்து திருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரும் 1985ம் ஆண்டு புரட்டாதி மாதம் 23ம் திகதி நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னிலையில் தோன்றி அப்பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1985ம் ஆண்டு புரட்டாதி மாதம் 17ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி,
ஆ. குணநாயகம்,
பதிவாளர்

தயாரித்தவர்:
எஸ்.கந்தசாமி ஜே.பி. யு.எம்.
மனுதாரின் சட்டத்தரணி;

786

# இடைக்காடு பகுதியில் மக்கள் பதற்றம்! பிரஜைகள் குழு கவலை

(மானிப்பாய்)

அச்சுவேலி இடைக்காடு பகுதியில் இராணுவத்தினரின் நடமாட்டத்தால் பொது மக்கள் பெரிதும் பீதியடைய நேரிட்டுள்ளதாக அப்பகுதி பிரஜைகள்குழுயாழ். அரசஅதிபருக்கு புகார் செய்துள்ளது.

இடைக்காடு பகுதியிலுள்ள தோட்டக்கிணறுகளுக்கு அடிக்கடி குடிதண்ணீர் எடுக்க வரும் இராணுவத்தினர் அப்பகுதி மக்களை அசௌகரியப் படுத்துவதுடன் இடையிடையே துப்பாக்கிப் பிரயோகமும் செய்வதாக கூறப்படுகிறது.

இதன்காரணமாக அப்பகுதி மக்கள் பெரிதும் அச்சமடைந்துள்ளதுடன் பல குடும்பங்கள் அங்கிருந்து வெளியேறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுசம்பந்தமாக அப்பகுதி பிரஜைகள் குழு யாழ். அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளது.

## Second Death Anniversary

IN LOVING MEMORY
of
WILFRED DHARMARANJAN LAWRENCE

Born: 14-07-1944 Died; 20-09-1983

In God's care you rest above and in our hearts you stay with Love.

Fondly remembered by wife: Wimala,
Children: Dinesh and Roshi (817)

## எங்கள் அன்பு மகனின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்: 14-07-1944 ஆண்டவன் அடியில்: 20-09-1983

WILFRED DHARMARANJAN LAWRENCE
(SANNA)
"For ever with the Lord"

உமது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் உமது அன்பு மம்மி, டடி, சகோதரிகள் குடும்பத்தினர், தம்பி குடும்பத்தினர் மற்றும் உற்ருர், உறவினர்கள்;
122, யாழ்ப்பாணம் வீதி, மானிப்பாய்; (750)

## 2-வது பிறந்ததின வாழ்த்து
### செல்வன் கோபி



ஏழாலை இழக்கைச் சேர்ந்த துரைசிங்கம் திரேசா தம்பதிகளின் செல்வப்புதல்வன் கோபி இன்று (20-09-1985) தனது 2-வது பிறந்ததினத்தை சிறப்பாக கொண்டாடுகின்ருர்.

இவரை டடா, மம்மி, அப்பம்மா, அப்பப்பா, பெரியத்தை குடும்பத்தினர், பெரியப்பா குடும்பத்தினர், ஆசை அப்பா குடும்பத்தினர், ஆசை அத்தை, சின்னத்தை ஜேர்மனியில் இருந்துகொண்டு திருச்சித்தப்பா, கிறிசித்தப்பா, பாகச்சித்தப்பா ஆகியோர் இறைவன் அருள் ஆசியுடன் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

வை. துரைசிங்கம்.
(810)

## 1-வது ஆண்டு நினைவஞ்சலி
### உஷாயினி சதாநாதன் (மாலா)



தோற்றம்: 24-11-1959

மறைவு: 01-10-1984

நல்லவை நினைக்கும் நெஞ்சால்
நாடும் இன்சொல்லின் பண்பால்
இல்லை விளக்கே ஆனாய்
எமக்கெலாம் தெய்வ மானாய்
அல்லல் நாம் உற நீஇன்றே
அவனியை விரைந்து நீத்தாய்
சொல்லரும் குணங்கள் கொண்டாய்
பிரிந்தமை தாங்கு வோமா?

உமது பிரிவால் துயருறும்:
ஆசை அப்பா, அம்மா, அன்புக் கணவன், மாமி, மச்சான்மார், சகோதரர், சகோதரிகள், மைத்துனிமார், மற்றும் உற்ருர், உறவினர்கள்.
மானிப்பாய் தெற்கு, மானிப்பாய். (811)

## 3-வது பிறந்ததின வாழ்த்து



### செல்வி R. பாத்திமா மிஸ்லி
20-9-85

நாவலர் வீதியைச் சேர்ந்த K. M றபீக்-ஜலீஸா தம்பதிகளின் செல்வப் புதல்வி பாத்திமா மிஸ்லி தனது மூன்ருவது பிறந்த தினத்தை இன்று தனது பெற்ருேருடன் வெகு விமரிசையாகக்கொண்டாடுகிருர். இவரை அன்பு மம்மி, டடா, வாப்பம்மா, உத்தம்மா அப்பா, அப்பச்சி, அன்ரிமார், மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சாச்சாமார், அமிஞ அன்ரி, சஜன் அங்கிள். நௌபால் அங்கிள் கொழும்பில் இருக்கும் மாமாமார், மாமிமார், சாந்திமாமா குடும்பத்தினர் மற்றும் சகோதர சகோதரிகளும், உற்ருர், உறவினர்களும் அல்லாஹ்வின் உதவியால் சகல கலைகளும் கற்று பல்லாண்டுகாலம் வாழ்க என வாழ்த்துகிருர்கள்
806

## இன்றைய பலன்

மாதம்: புரட்டாதி
திகதி: 4 (20-9-'5)
கிழமை: வெள்ளி
திதி: ஷஷ்டி
நக்ஷத்திரம்: அனுஷம்

மேடம்: எதிலும் அலட்சிய மனப்பான்மை தோன்றக் கூடும். வியாபாரத்துறையில் பிணக்குகள் தோன்றிமறையலாம். வேவுகளை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர். அவதானம் நன்று

இடபம்: கஸ்திர சுகமும் உண்டு. கன்னியம் சேரும். புதுவாழ்வும் மலரும். நண்பர்கள் உதவிகிட்டும். புண்ணிய விருப்பும் மேலிடும்.

மிதுனம்: துஷ்டர்கள் உறவால் துயரத்தில் மூழ்குவீர்கள். சிலர் வாழ்க்கையில் அவப்பெயருக்கும் இடமேற்படும். கணவன் மனைவி உறவும் சாரசாரமாகவேயிருக்கும்.

கடகம்: சமூகத்தில் அந்தஸ்து உயருவதற்கு இடமுண்டு. பொதுப்பணிகளில்

[5-ம் பக்கம் பார்க்க]

## மணிவாக்கு

தூய்மை, நிதானம், விடாமுயற்சி ஆகியவை வெற்றிக்குத் தேவையான மூன்று அம்சங்களாகும். எல்லாவற்றுக்கும் மேலாக அன்பு.

— சுவாமி விவேகானந்தர்

# அங்கோலாவில் 18 தென்னாபிரிக்க விமானங்கள் குண்டுவீச்சு

லுவாண்டா, செப்.19

அங்கோலாவினுள் நேற்று 18 தென்னாபிரிக்க போர்விமானங்கள் குண்டுவீச்சுக்களை நடத்தின. இதில் அங்கோலா இராணுவத்துக்கு பாதிப்பு ஏற்பட்டதாகவும், அத்துடன் அங்கோலாவின் சில கேந்திரப்பகுதிகள் தாக்குதலுக்குள்ளானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நமீபிய விடுதலைப்போராளிகளான 'சுவாப்போ' இயக்கத்தவரை வேட்டையாடும் வகையில் தென்னாபிரிக்கத் துருப்புகள் அங்கோலாவினுள் புகுந்துள்ளன. சுமார் 500 தென்னாபிரிக்கத் துருப்புகள் இந்த நடவடிக்கையில் இறங்கியுள்ளன.

'சுவாப்போ' தளங்களையும் ஆயுதகளஞ்சியங்களையும் நிர்மூலமாக்குவதே தமது முக்கிய நோக்கமென்று தென்னாபிரிக்கா அறிவித்துள்ளது. ஆயினும் நேற்றைய தாக்குதல் அங்கோலாவினுள் அந்நாட்டின் இராணுவத்தளங்கள் மீதே மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலை அங்கோலா அரசு கண்டித்துள்ளது. ஆயினும் தென்னாபிரிக்க அரசு இதனை அசட்டை செய்துள்ளது. 'சுவாப்போ' தளங்களை மட்டுமே தாம் தாக்கியதாக தெரிவித்தது.

அங்கோலாவின் வடபகுதியில் நமீபியா அமைந்துள்ளது. இப்பிரதேசத்தில் தென்னாபிரிக்காவின் கட்டுப்பாட்டை நீக்கவே 'சுவாப்போ' இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (இ)

# நமது நோக்கு

## மீண்டுமொரு போர்நிறுத்தம்!

மீண்டுமொரு போர் நிறுத்தம்!

கடந்த ஜூன் மாதம் 18ம் திகதி நடைமுறைக்கு வந்த போர்நிறுத்தம் இம் மாதம் 17ம் திகதியுடன் முடிவுற்றது.

இந்த மூன்றுமாத காலத்துக்குள் அமைதிப்பேச்சுக்கள் மூலம் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்பட்டு மீண்டும் இந்த நாட்டில் அமைதி ஏற்படும் என்று கனவுகண்டவர்களின் நம்பிக்கை சிதறடிக்கப்பட்டமை ஒருபுறமிருக்க போர்நிறுத்தம் ஏற்படுவதற்கு முன்பிருந்ததையும்விட நிலைமைகள் மோசமடைந்துவிட்டன.

அரசு தனது படைபலத்தைப் பன்மடங்கு அதிகரித்துக்கொள்ளவும், ராணுவ விமானத் தளங்களை விஸ்தரித்துக்கொள்ளவும் இந்த ஓய்வுகாலத்தைப் பெரிதும் பயன்படுத்திக் கொண்டது.

வவனியா, மட்டக்களப்பு திருகோணமலை போன்ற தமிழ்ப்பகுதிகளில் பெரும் நாசம் விளைவிக்கப்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கான மக்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளனர். அதேசமயம் வெளியேறவும் முடியாமல் உள்ளே இருக்கவும் முடியாமல் தவித்திருக்கிறார்கள். திருகோணமலையில் இப்படியான நிலையையில் ஊரடங்கும் செயல்படுத்தப்பட்டமையால் பாதிப்பு மேலும் அதிகரித்திருக்கின்றது.

அரசு பறக்கவிட்ட சமாதானப் புறா அடுக்கடுக்காக உயிர்களைப் பலி கொள்ளும் கொடூர வல்லூறாக மாறிவிட்டமை பெரும் கவலையளிப்பதாகும்.

நிலாவெளி அகதிமுகாமில் நடைபெற்றதாகக் கூறப்படும் சம்பவம் நாகரிக உலகம் வெட்கித்தலைகுனிய வேண்டிய ஒன்று.

எதையும் மறுத்துரைக்கும் அரச செய்தி ஸ்தாபனம் இதையும் மறுத்துள்ளது.

அநுராதபுரத்தில் ஏற்பட்ட சம்பவத்தையடுத்து ஒரு போர் ஓய்வு ஏற்பட்டது. இப்போது வவனியா, மட்டக்களப்பு, திருமலை சம்பவங்களையடுத்து இன்னொரு போர்ஓய்வு. இப்போதும் அரசே முதலில் அதனை அறிவித்தது. "தீவிரவாதிகள் மீறுவார்களாகில் தகுந்த நடவடிக்கை எடுப்போம்" என்று எச்சரிக்கையும் விடுத்தது.

இவ்வறிவித்தலை வெறும் கேலிக்கூத்தாக- உலகத்தின் கண்ணில் மண்ணைத்தூவும் செயலாகத் தமிழ்த்தீவிரவாதிகள் குறிப்பாக உடனடியாகவே நிராகரித்துவிட்டனர். ஆனால் இந்தியத் தலைவரைச் சந்தித்ததின் பின் அவர்கள் போர் நிறுத்தத்தை ஒரு நிபந்தனையுடன் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இலங்கை அரசின் ஆயுதப் படைகள் இப்போர் நிறுத்தத்தை உண்மையாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதே அந்த நிபந்தனை.

இதனைக் கண்காணிப்பதற்கு பன்நாட்டுப்படை அல்லது ஐ.நா. அமைதிப் படையொன்றை இங்கு அனுப்பவேண்டும் என்ற கோரிக்கையை அவர்கள் கைவிட்டிருப்பதாகக் கருதலாம்.

இலங்கையில் நிரந்தரமான அமைதி நிலவவேண்டும் என்பதிலும் சிங்கள மக்களைப்போல் தமிழ் மக்களும் சகல உரிமைகளோடும் சமமாக வாழவேண்டும் என்பதிலும் இந்திய அரசு அக்கறை கொண்டுள்ளது என்பதை நாம் புதிதாக இங்கு சுட்டிக்காட்டத் தேவையில்லை.

அன்னை இந்திரா காந்தியும் அவருக்குப்பின் புதல்வர் ராஜீவ்காந்தியும் இதனையே வற்புறுத்திவருகின்றார்கள். இங்கே சர்வதேச அரசியல் பூசல்களுக்கு இடம்தராமல் அமைதியைத் தோற்றுவிக்க இந்தியா முனைந்துசெயல்பட்டு வருகின்றது.

எனவே பலவாறும் தயங்கியதின் பின் தமிழ்த்தீவிரவாத இயக்கங்களின் முக்கிய தலைவர்கள் டில்லியில் இந்தியத் தலைவரை சந்தித்துப் பேசியுள்ளமை அமைதி முயற்சியில் ஏற்பட்டிருந்த முட்டுக்கட்டை நீங்குவதற்கு உதவியுள்ளது எனலாம்.

அதிலும் இந்தியா இவ்விடயத்தில் அளித்துள்ள உறுதிமொழியானது சகல தரப்பினருக்கும் ஊக்கத்தைக் கொடுப்பதாக இருப்பது ஒருபுறமிருக்க மனித உயிர்கள் மேலும் பலியாகாமல் தடுத்து இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான ஒரு தீர்வினைக் காண்பதற்கான முயற்சிகளைத் தீவிரப்படுத்தவும் உதவுவதாய் உள்ளது.

"இலங்கைஅரசும், தீவிரவாதக்குழுக்களும் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பதாக அளித்துள்ள உறுதிமொழியினை மனப்பூர்வமாக இந்தியா நிறைவேற்ற வைக்கும் என்பதே அந்த உறுதிமொழி.

# போர்நிறுத்த உடன்பாடு மனப்பூர்வமாக நிறைவேற்ற இந்திய அரசு உறுதி!

புதுடில்லி, செப் 19.

இலங்கை அரசாங்கமும் தமிழ்த்தீவிரவாதக்குழுக்களும் போர் நிறுத்தத்தைமேற்கொள்வதற்குத் தெரிவித்துள்ள உடன்பாட்டையடுத்து இலங்கையில் போர்நிறுத்த ஏற்பாட்டை இந்திய அரசு மனப்பூர்வமாக நிறைவேற்றும் என்று தெரிவித்துள்ளது.

இந்தியப் பிரதமர் ராஜீவிடம் இலங்கை அரசும், அதனைத்தொடர்ந்து ஈ.தே.வி. முன்னணியும் போர் நிறுத்தத்துக்கு உடன்பாடு தெரிவித்ததையடுத்தே இந்தியத் தரப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இலங்கையில் போர் நிறுத்தத்தை மீறும் நடவடிக்கைகள் அவ்வப்போது நடந்துவருவதை ஈ.தே.வி.மு. சுட்டிக்காட்டியுள்ளது. இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு ரொமேஷ்பண்டாரி ஈ.தே.வி.மு.வின் முறைப்பாடுகளைக் கேட்டறிந்தார்.

ஈ.தே.வி.மு.வின் பேச்சாளரான திரு. பாலகுமார், தெரிவித்திருப்பதாவது:

"இலங்கை அரசு தன்னிச்சையாகவே போர் நிறுத்தத்தை அறிவித்தது. ஆனால் அப்பாவிமக்கள் வவனியா, திருமலையில் பெருமளவில் கொல்லப்பட்டுவருகின்றனர்.

போர் நிறுத்தம் என்றபோர்வையில் இவை நடைபெறுவது மிகவும் பயங்கரமானதாகும். எனவே இத்தகைய உயிர்ச் சேதங்கள் இடம் பெறுதலையில் இந்திய அரசு போர் நிறுத்தத்தை தகுந்த கவனத்தில் கண் காணிக்க வேண்டும்", என்றார். (இ)

## முழு நேர வேலை நிறுத்தம்?

(யாழ்ப்பாணம்)

சோண்டாவில் — இணுவில் தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்க சிவில் தொழிலாளர் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் பனம்பொருள் உதவி கூட்டுறவு ஆணையாளர் யாழ். அரசாங்க அதிபர் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத பட்சத்தில் முழு நேர வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாகவும் சங்கம் தெரிவித்துள்ளது.

## மதுரைப் பாடசாலைகள் ஞாயிறு ஆரம்பம்

மதுரை, செப் 19

மதுரை மாவட்ட அனைத்து கல்லூரிகள், பாடசாலைகள் என்பன எதிவரும் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகும்.

இலங்கைத்தமிழருக்கு ஆதரவான ஆர்ப்பாட்டங்களின் காரணமாக இக் கல்வி நிலையங்கள் கடந்த 13ந்திகதி கால வரையறையின்றி மூடப்பட்டன.

தற்போது நிலைமைகள் வழமைக்குத் திரும்பியுள்ளதையடுத்து எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 22ம் திகதி இவை ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## மல்லிகை ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

'மல்லிகை' சஞ்சிகையின் 21 வது ஆண்டு மலர் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை மூன்றுமணிக்கு மல்லிகை காரியாலயத்துக்கு அருமையிலுள்ள மொடேர்ண் மினி சினிமா மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்ச்சிக்கு திரு. சபா. ஜெயராசா தலைமை தாங்குவார்.

# பிரிட்டிஷ் எதிர்க்கட்சிதலைவர் ஆர்ஜன். ஜனாதிபதி சந்திப்பு!

## தட்சர் கண்டனம்!!

பாரிஸ். செப் 19

ஆர்ஜன்டீனாவும், பிரிட்டனும் புதிய உறவுகளை ஆரம்பிக்க வேண்டுமென ஆர்ஜன்டீன ஜனாதிபதி ராவுப்வ் அல்போன்ஸினும், பிரிட்டனின் எதிர்க்கட்சியான தொழிற்கட்சித்தலைவர் திரு. நீல்கின்னொக்கும் விருப்பந் தெரிவித்துள்ளனர்.

பிரான்ஸில் ஆர்ஜன்டீன ஜனாதிபதி உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ளார் இவரை திரு. கின்னொக் பாரிஸில்சந்தித்தார். இச்சந்திப்பையடுத்தே இரு பிரமுகர்களும் மேற்கண்ட விருப்பத்தை தெரிவித்துகூட்டறிக்கையொன்றை வெளியிட்டனர்.

பிரிட்டனுக்கும், ஆர்ஜன்டீனாவுக்குமிடையிலான போக்லண்ட்தீவு விவகாரம் தொடர்பான கருத்து வேறுபாடுகள் தீர்க்கப்பட்டு இருநாடுகளுக்குமிடையே நிரந்தர சமாதானத்தை ஏற்படவேண்டுமெனவும் அவர்கள் விருப்பந் தெரிவித்தனர்.

திரு நீல்கின்னொக், ஜனாதிபதி அல்போன்ஸின் ஆகியோருக்கிடையிலான சந்திப்பை பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தாட்சர் கண்டித்துள்ளார்.

போக்லண்ட் விவகாரம் குறித்து எத்தகையபேச்சுக்கும் இடமில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (இ)

## ஆலய தொண்டர் சபையின் பணி

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை ஸ்ரீ வரதராசப் பெருமாள் ஆலய தொண்டர் சபையினர் அண்மையில் நடைபெற்ற திருவிழாக் காலத்தில் சிறப்பாகத் தொண்டாற்றி அடியார்களுக்கு பேருதவி புரிந்தது குறிப்பிடத்தக்கது.

திருவிழாக்காலங்களில் இறைவனை வழிபட வரும் பெருந்தொகையான அடியார்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கும் நோக்கத்துடனும் போக்குவரத்து ஒழுங்குகளைக் கவனிப்பதற்குமென தொண்டர் சபையொன்றும் அண்மையில் அமைக்கப்பட்டது தெரிந்ததே. (ச)

## வல்லிபுர மாயவன்

வேதனைகள் வந்தெம்மை வாட்டும்போது
வேய்ங்குழலோய் நீயென்ன பார்க்கின்றாயோ
சோதனைகள் போதாதென்றோ சோதனைமேல்
சோதனைகள் தந்தே யெம்மைத் தவிக்கவிட்டு
சாதனைகள் செய்யுங்கள் என்று சொல்லி
சற்றேனும் இரங்காமல் இருக்கலாமோ
வாதனைகள் தவிர்த்தெம்மை வாழவைப்பாய்
வல்லிபுர மாயவனே வருவாய் இன்றே

-ஆழ் கடலான்

# 'அந்தத்' தமிழகம் நோக்கி . . . . .

— தி. பொன்னம்பலவாணர்

## திருமணப் பந்தலாகக் காட்சி தரும் திருப்பரங்குன்றம்!

[10]

திருப்பரங் குன்றத்தில் உள்ள முருகனாலயத்தினைத் தூரத்தில் செல்லும்போது பார்த்தால் திருமணப்பந்தல் போலவே காட்சியளிக்கின்றது

மணப்பந்தல் போன்ற மண்டபமும் கோபுரமும் முன்பாக அமைந்திருக்க பின்னணியாக மலை இருக்க திருப்பரங் குன்ற ஆலயம் அமைந்திருக்கின்றது.

சூரசங்காரத்தின்பின் முருகப் பெருமான் திருச்செந்தூரில் தங்கி சிவபூசை செய்தார். அதன்பின் தேவர்கள் முருகனைப் பூசித்தார்கள். இவற்றின்பின் கதிர்காமத்திலிருந்து தமிழகம் நோக்கிப் புறப்பட்ட முருகப்பெருமான் திருச்செந்தூரிலிருந்து தேவர்களுடன் புறப்பட்டு திருப் பரங்குன்றத்தை அடைந்து தங்கினார். திருப்பரங்குன்றத்திலேயே இந்திரனது வளர்ப்பு மகளாகிய தெய்வானை அம்மையாருக்கும் முருகப்பெருமானுக்கும் வேதவிதிப்படி திருமணம் நிகழ்ந்தது.

முருகப்பெருமானுக்கும் தெய்வகனை அம்மையாருக்கும் நடைபெற்ற திருமணத்துக்காக தேவத் தச்சனாகிய விசுவகர்மாவின் மனசங்கற்பத்தால் உண்டாக்கப்பட்டதே திருப் பரங்குன்ற ஆலயமண்டபங்களாகும்.

மண்டபப்படிகளில் ஏறிச் சிறிதுதூரம் சென்றதும் இலட்சுமி தீர்த்தத்துக்குச் சென்று கைகால்கழுவி ஆலயத்துள் செல்லும்படி ஒரு ஆலை சிப்பந்தி வழிபடுத்துகின்றார். தீர்த்தக்கரைக்குச் சென்றதும் உப்புசருக்கரை கலந்த பொட்டலத்தையும் நெற்பொரி போன்ற பொரி நிறைந்த பொட்டலத்தையும் விலைக்கு வாங்கிக் குளத்திலுள்ள மீன்களுக்குப் போடும்படி கூறுகின்றார்கள்.

இவற்றை மீன்களுக்குக் கொடுப்பதனால் "பருவு-பத்து கிரகதோஷம்" முதலிய நோய்களிலிருந்து விடுபடத்தக்க புண்ணியம் கிடைக்கும் என்று அங்குள்ள விளம்பரப்பலகை ஒன்று அறிவிக்கின்றது.

திருப்பரங்குன்றக் குளத்தில் இருக்கும் மீன்களுக்கு உதவுவது முனிவ...ரின் தவத்துக்கு உதவும் பெரும் புண்ணியத்தைத் தரும் போலும்!

திருப்பரங்குன்ற உச்சியில் அல்ல முருகன் கோயில். மலையேற்றத்தின் ஆரம்பப்பகுதியிலே மண்டபங்களும் சிறிது உயரத்திலே கோவிலும் விளங்குகின்றன. நிலமட்டத்திலிருந்து சுமார் 150 - 200 அடி உயரத்தில் கோவில் அமைந்திருக்கிறது. இரண்டு மூன்று மண்டபங்களைக் கடந்து முருகனின் மூலஸ்தான ஆலயத்துக்குச் செல்ல வேண்டும் முருகனைத் தரிசிக்கச் செல்லும் போது வழியில் உள்ள மண்டபங்களில் சில முனிவர்களும் வீரவாகுதேவர் முதலியோரும் இவ்வடிவில் நின்று வணங்குவதைக் காணலாம்.

முருகப்பெருமானது மூலஸ்தானத்தை அடைந்தால் அங்கு ஒரு ஆச்சரியம், மூலஸ்தானத்தில் முருகப்பெருமான் மட்டுமில்லை.

பவளக்கனிவாய்ப் பெருமான் என்றபெயரில் திருமால், முருகன், வனதுர்க்கை, கற்பகவிநாயகர், சத்தியகிரீஸ்வரர் என்னும்பெயரில் லிங்க வடிவில் சிவபெருமான் என 5மூர்த்திகள் மூலஸ்தானத்தில் உள்ளனர்.

முருகப்பெருமானுக்கு ஒரு பக்கத்தில் அகத்திய முனிவரும் மற்றப் பக்கத்தில் தெய்வானை அம்மையாரும் காட்சியளிக்கின்றனர்.

முருகப்பெருமானை நாடிச் செல்லும் பக்தர்கள் காணிக்கைகளைச் செலுத்த வசதிகள் கட்டண ஒழுங்குகள் எல்லாம் உண்டு. முருகப்பெருமானுக்குப் பாலாபிஷேகம் செய்வதான நேர்த்திக்கடனுடன் செல்பவர் அதற்கான சீட்டைப் பெற்றுச்சென்று கொடுத்தால் முருகப்பெருமானின் கையிலுள்ள நீண்டு அகன்ற வேற்பெருமானுக்கு உடனுக்குடன் அபிஷேகம் செய்துவைக்கிறார்கள்.

முருகப்பெருமானின் நெற்றியிலே விளங்கும் வைரக்கல் பதித்த விபூதிக்குறியின் ஒளி தரிசிப்போரின் உள்ளத்தில் ஒளியை உண்டாக்குகின்றது.

திருப்பரங்குன்ற மூலஸ்தானத்திலுள்ள இன்னொரு அதிசயம்; முருகப்பெருமானின் திருமேனி மலைக் குகையில் குடையப்பட்டது போல சுவரோடு சேர்ந்திருக்கிறது.

அருகில் திருமால், பிள்ளையார், வனதுர்க்கை திருவுருவங்கள் முருகன் திருவுருப் போல் மாலையுடன் சேர்ந்தாற்போல் இல்லை!

திருப்பரங்குன்றத்தில் திருமுருகன் திருமணம் நடந்த சிறப்பால் இன்று அங்கு திருமணம் செய்வதைப் பலர் பெரும் பாக்கியமாகக் கருதி தமது திருமணங்களை நிறைவேற்றுகின்றனர். இவர்களுக்கு உதவும்வகையில் பல திருமண மண்டபங்கள் விளங்குகின்றன.

வறுமைப்பட்டவர்கள் தாலி கட்டி, பிற திருமணச் செலவை ஏற்றுக்கொள்ளும் தரும அமைப்புக்களும் புண்ணியவான்களின் தருமக்கட்டளைகளும் அங்கு இருப்பதை அறிந்தேன். (தொடரும்)

## 'அத்துமீறலு'க்கு ரூ. 500 அபராதம்!

(யாழ்ப்பாணம்)

யாழ் ஆஸ்பத்திரி வார்ட்டில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களைப் பார்வையிடும் குறிப்பிடப்பட்ட நேரம் தவிர்ந்த ஏனைய நேரத்தில் வார்டுக்குள் செல்ல முயன்ற ஒருவருக்கு யாழ். நீதிமன்றம் 500 ரூபா அபராதம் விதித்துள்ளது.

குறிப்பிட்ட நபர் ஒருவர், சம்பவதினம் காலை 8-30 க்கு வார்டுக்குள் பிரவேசிக்க எத்தனித்த பொழுது, ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் வைத்திய கலாநிதி ஒருவர் தடுத்ததாகவும், அதனை தொடர்ந்து அந்த நபர் வாய்க்கு வந்தபடி அந்த வைத்திய கலாநிதியைப் பேசியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் அந்த நபர் ஆஸ்பத்திரிப் பொலிசில் ஒப்படைக்கப்பட்டு யாழ். நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

நேற்று யாழ். நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

நேற்று யாழ். நீதிமன்ற நீதவான் எஸ். நாகராசா அந்த நபருக்கு 500 ரூப அபராதம் செலுத்தும்படி உத்தரவிட்டார். (மா)


## மின்தறி நெசவாளர்கள் (பெண்கள்)

யாழ்ப்பாணத்தில் பிரசித்திபெற்ற மின்தறி நிலையத்துக்கு பெண் நெசவாளர்கள் உடன் தேவை, 25-09-85க்குள் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல: 751,
C/O ஈழநாடு,
யாழ்ப்பாணம்.

(751)



## வெளிநாடு பிரயாணம்

★ அமெரிக்கா ★ கனடா
★ பிரான்ஸ் ★ ஜேர்மனி

செல்லவிரும்பும் பிரயாணிகள் என்னுடன் நேரில் வந்து சந்திக்கவும்.

இன்று முதல் ஞாயிறு வரை (22-9-85)

வ. நல்லையா,
அலவத்தை - அளவெட்டி.

(774)


## மந்திகை ஆஸ்பத்திரி அபிவிருத்திசபை

(கரவெட்டி நிருபர்)

மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கான அபிவிருத்திச் சபை கரவெட்டி பருத்தித்துறை உதவிஅரசாங்க அதிபர்களின் சிபார்சின் பேரில் நியமிக்கப்பட்டுள்ளது.

இவ் வைத்தியசாலை அபிவிருத்தி சபையின் தலைவராக மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கணேசநாதனும், உபதலைவர்களாக டாக்டர் எஸ், குழந்தைவடிவேலு (மகப்பேறு வைத்தியநிபுணர்), திரு என். கணேசசிங்கராஜா, (சமாதான நீதிபதி), திரு என் பாலசுப்பிரமணியம் (இளைப்பாறிய நீதவான் நீதிமன்ற முதலியார்). செயலாளராக திரு. எஸ். செந்துராசா (பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்), துணைச்செயலாளர்களாக திரு. ஏ. என். எஸ். திருச்செல்வம் (யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை உப அலுவலக நூலகப்பொறுப்பாளர்), திரு. எஸ் ஏ ஞானச்சந்திரன் (கிராமசேவைஅலுவலர்). திரு. எம். தேவராஜன் (இலிகிதர் வைத்தியசாலை) ஆகியோரும் பொருளாளராக திரு. எஸ். சிவராமலிங்கம் (பிரபல வர்த்தகர்), செயற்குழு உறுப்பினர்களாக திரு எஸ் ஞானதேசன் (உதவி அரச அதிபர் அலுவலக நிர்வாக அதிகாரி), திரு. ஏ. தேவராஜன். இளைப்பாறிய அரச உத்தியோகத்தர்), திரு. ஏ. கே மாணிக்கம் (இளைப்பாறிய அதிபர்), திரு. எஸ். சதானந்தன் (ஆசிரியர்), திரு. எம். கனகசபாபதி (ஆஸ்பத்திரி செயலாளர்), திரு. இரா. பாலகிருஸ்ணன் (மேற்றன்) ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

சபையின்போஷகராக யாழ். சுகாதாரசேவைப்பணிப்பாளர் டாக்டர் கே. மாணிக்கமும், ஆலோசகர்களாக பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு வை. வேலும்மயிலும், கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. இ. ஐயாத்துரை திரு. ஆ. வ. தர்மராசா வட்டார கல்வி அதிகாரி), திரு. வ. க ஈசுரபாதம். வட்டாரக் கல்வி அதிகாரி) ஆகியோரும் செயற்படுவார்கள்.

## சாம்பியன்



[யாழ்ப்பாணம்]

மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலையில் முதற்தடவையாக இடம்பெற்ற இலவிளையாட்டுப் போட்டியில், 11 வயதுக்குக் கீழ்பட்டோருக்கான போட்டிகளில் செல்வன் ந. முரளிராஜ் சம்பியனானார் இவர், இலங்கை வங்கி உடுவில் கிளை முன்னாள் முகாமையாளரும், தற்பொழுது வங்கிப் பரிசோதனை அதிகாரியாகக் கடமை யாற்றுபவருமான திரு ரி. சி. என். நவரத்தினராஜா, திருமதி நவரத்தினராஜா ஆகியோரின் கனிஷ்ட புத்திரராவார்.

## ஒருநாள் உண்ணாவிரதம்

(மாவிட்டபுரம்)

சிறையில் உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவுதெரிவித்து காங்கேசன்துறை செல்லப் பிள்ளையார் ஆலய முன்றலில் ஒருநாள் உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது.

காங்கேசன்துறை பொது மக்களால் ஒழுங்குசெய்யப்பட்ட இந்த உண்ணாவிரதத்தில் ஆண்கள், பெண்கள் பாடசாலை மாணவர்கள் உட்பட சுமார் 1000 பேர் கலந்து கொண்டனர்.


## வெளிவந்துவிட்டது!

G. C. E. (A/L), G. A. Q.
வகுப்புகளுக்குரியது

## பொருளியல் I

(கேள்வி நிரம்பல் நெகிழ்ச்சி பற்றிய கோட்பாடுகள்)

ஆசிரியர் திரு. ந. பேரின்பநாதன் M. A
(விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

வெளியீடு:

பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

விலை: 7/50

தனிப்பிரதி வேண்டுவோர் ரூபா 10/- காசுக்கட்டளை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

முக்கிய குறிப்பு:

சட்டபீட மாணவர்களின் கவனத்திற்கு

இந்த வருட சட்டபீட பரீட்சை எடுக்காத அனைத்து மாணவர்களும் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு தவறாது சமுகம் தரவும். பரீட்சை மீண்டும் எடுப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(812)

## விவசாய கருத்தரங்கு

[வட்டுக்கோட்டை]

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் வரும் 21ம் திகதி சனிக்கிழமை காலை மறுமலர்ச்சி மன்றத்தினர் விவசாயக் கருத்தரங்கொன்றை நடாத்துகின்றனர். பலநோக்குக்கூட்டுறவுச்சங்கத் தலைவர் ப. தருமலிங்கம் தலைமை தாங்குவார்.

**ராஜா மினி**

தினசரி 10-30, 2-30, 6-30

ரஞ்சினி-ஊர்வசி

மச்சக் காளை

(ஈஸ்ட்மன் கலர், புதிய வெளியீடு)

**லிபேர்ட்டி மினி**

10-30, 2-30, 4-45; 7-00

RED SUN

இறந்த சண்டைப்படம்

**சரவணபவன் மினி சினிமா**

(பெருமாள் கோவிலுக்கும் - வெலிங்டன் சந்திக்கும் இடையில்)

4 x 4 திரையில்

10-30, 2-30, 4-30, 7-00

John Saxon in

PRISONERS OF THE LOST UNIVERSE

(மறைந்த மண்டலத்தில் கைதிகள்)

(வயது வந்தோருக்கு மட்டும்)

இளைஞர்களே உங்களுக்காக!

**உஷா மினி**

10-30, 2-30, 4-45; 6-45

THE LAST HUNTER

[ஜேர்மன் மொழியில்]

முழுக்க முழுக்க விறுவிறுப்பான தாக்குதல்- இதுவரை வெளிவந்த படங்களில் மிகச்சிறந்த படம். தவறவிடாதீர்கள்.

**ராஜேஸ்வரி மினி**

"K5" திரையரங்கில்

10-30, 12-30, 2-30

4-30, 6-30

Sophia Laurance in

Sun Flower

(Love story)

இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போது தனது காதலியைப் பிரிந்து போருக்குச் செல்லும் ஒரு வீரனின் காதல் காவியம்.

**வெலிங்டன்**

10-30, 2-30, 6-30,

பாக்கியராஜ்-அம்பிகா நடித்த

அந்த ஏழு நாட்கள்

**மனோகரா சினிமா**

10-30, 2-30, 6-30

2-வது வாரமாக ஓடுகிறது!

சிவகுமார், விஜயகாந்த், பூர்ணிமா ஜெயராம், விக்கிரமன், ஜெய்சங்கர் நடித்த

ராஜா மகேந்திரனின்

நீங்கள் கேட்டவை

சகலமும் கலர்



## முதலாவது பிறந்ததின வாழ்த்து



ரேகா - கஜேந்தினி

யாழ்ப்பாணம் 41/1 மானிப்பாய் வீதியைச் சேர்ந்த குணசீலன் ரஞ்சினி தம்பதிகளின் செல்வப் புதல்வி ரேகா-கஜேந்தினி தனதுமுதலாவது பிறந்தநாளை இன்று 20-9-85 தனது இல்லத்தில் கொண்டாடுகிறார். சகுதி அப்பா, அம்மா, அண்ணமார், அக்கா மார் மச்சான்மார் மச்சான்மார், மாமாமார் மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார். சித்தப்பாமார், சித்திமார் அம்மம்மா, அப்பம்மா, அப்பப்பாமார் ஆகியோர் துர்க்கை அம்மன் அருளால் சீரும் சிறப்புடன் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள். 751


## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தில்

காரம்பன், ஊர்காவற்றுறையைச் சேர்ந்த கனகரத்தினம் கைம்பெண் சிவக்கொழுந்து என்பவரின் மரண சாதன மற்ற மரணச் சொத்துக்கள் சம்பந்தமாக.

—மரணமெய்தியவர்

வழ. இல: ரீ 102

கனகரத்தினம் சச்சிதானந்தன், தபாற்கந்தோருக்கருகாமை, காரம்பன் ஊர்காவற்றுறை:

—மனுதார்

எதிர்

கனகரத்தினம் சதானந்தன், தபாற்கந்தோருக்கருகாமை, காரம்பன், ஊர்காவற்றுறை

—எதிர்மனுதார்

மேலே உள்ள இலக்கம் கொண்ட மரணச் சொத்துக்களுக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985ம் ஆண்டு கார்த்திகை மாதம் 6ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின்தோற்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுணதாக்கப் படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகிறீர்கள்.

1985ம் ஆண்டு ஆனி மாதம் 24ந் திகதி

ஊர்காவற்றுறை நீதிமன்றக் கட்டளைப்படி,
க. பொன்னம்பலம்,
பதிவாளர்.

வரைவு
ச. இளங்கோவன்,
மனுதாரரின் சட்டத்தரணி.

805

## கொழும்பு ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு தபால் பைகள் வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு பஸ்மூலம் கொண்டு வரப்படும் என்று தபால் பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்திலிருந்து புதன், சனிக் கிழமைகளில் தபால் பைகள் அனுப்பிவைக்கப்படும் என்றும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## மாவைப் ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விழுந்து வெடித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது

மர்மமான முறையில் இவ்வாறு குண்டுகள் வந்து வீழ்ந்து வெடிப்பது மக்களிடையே பரபரப்பைஏற்படுத்தியுள்ளது

இந்த குண்டுகள் சேதம் விளைவிப்பனவாக இல்லாத போதும் பலத்த சத்தத்துடன் வெடிப்பதாகவும் குண்டு வீழ்ந்த இடத்தில் சிறுபள்ளம் காணப்படுவதாகவும் கூறப்படுகிறது

இக் குண்டுகள் எங்கிருந்து வருகின்றன? என்பது மர்மமாக இருப்பதாக கூறப்படுகிறது.


**கடைசி நேர வரிவிளம்பரம்**

**தவறிவிட்டது**

இல 651°80157 V பொன்னம்பலம் பிரேமநாதன், 37/5, மார்டின்றோட், யாழ்ப்பாணம் என்பவருடைய அடையாள அட்டை தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் மேல் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (823)


## இன்றைய பலன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபடுவீர்கள். தந்தை வழி ஆதரவு தாராளமாக உண்டு.

சிம்மம்: மனைச் சிறப்பு மணவாழ்வு இவற்றுடன் இனிப்பான செய்தியும் கிட்டும். தொழில் விருத்திக்கு இடமுண்டு. குடும்ப மகிழ்ச்சியுண்டு இன்பகரமானதினம்.

கன்னி: சிலருக்குப் பதவியுயர்விற்குமிடமுண்டு. சுற்றுடனிலும் மதிப்பு உயரும். தொழில் லாபம் கிட்டும். சுகபோக நாள்.

துலாம்: தூக்கம் விழிகளைத் தழுவமறுக்கும். கடந்த கால நிகழ்ச்சிகள் அலைமோதும் பொருள் விரையத்திற்கும் இடமுண்டு எக்காரியத்திலும் கவனஞ்செலுத்துவது நன்று

விருச்சிகம்: அதிக முதலீட்டைத் தவிர்க்கவும். வீண் சிந்தனையால் வேதனைப்படுவீர்கள். சிலருக்கு உடல் நலமும் பாதிக்கப்படும் எதற்கும் மனத்திடம் விரும்பத்தக்கது.

தனுசு: இதயத்தில் மகிழ்ச்சி பொங்கும் புதியவர் ஒருவரின் தொடர்பால் புதிய பாதை தோன்றும். காதல் விவகாரமும் தலைதூக்கலாம்.

மகரம்: ஆணவப் போக்கினால் மற்றவர்களைப் பகைத்துக்கொள்ளுவீர்கள். வீட்டிலும் பூசல்கள் தலைதூக்கி நிற்கும். வீணான சிந்தனைக்கு இடமளியாதிருக்கவும்.

கும்பம்: பொன்னான தினம் சிலருக்கு கல்வித்துறையில் அதிக ஆர்வம் பிறக்கும். பொதுத்துறைகளில் மனம் நாடும். அன்னைவழி ஆதரவும் தாராளமாகக் கிட்டும்

மீனம்; புத்திரர் மகிழ்ச்சியுண்டு தெளிந்தமனம்தெய்வ சித்தை தேடியது கிடைக்கும். அமைதியுடன் ஆனந்த வாழ்வும் உண்டு

திருமலை
வே. ரவீந்திரன்

## இப்படியும் நடக்கிறது

கிரிக்கெட் போட்டியில் ஒரு பக்கத்தில் எத்தனை பேர் விளையாடுவார்கள்?

இலங்கை—இந்திய கிரிக்கெட் டெஸ்ட் போட்டியை 'ரி. வி'யில் கண்டு களித்தவர்கள் சொல்கிறார்கள்; கிரிக்கெட் விளையாட்டில் ஒரு பக்கத்தில் பதின்மூன்று பேர் விளையாடுவார்கள் என்று! சரியா?

'SUNNY DAYS'ல் சுனில் கவாஸ்கர் இலங்கை பற்றி ஒளிவு மறைவின்றி குறிப்பிட்டிருந்தார். இந்த அனுபவம்; ஸ்ரீகாந்துக்கும், மனிந்தர் சிங்குக்கும் இப்பொழுது 'நிறைய' ஏற்பட்டுள்ளதாம்;

— ஊடுருவி

## பம்மைமடுவில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினம் சுமார் நூறு பேர் கொண்ட ஆயுதப் படையினர் வாகனங்கள் சகிதம் மேற்படி வீதி வழியாகச் சென்று சோதனைகளில் ஈடுபட்டிருந்தனர்;

வவுனியா நகரிலிருந்து ஐந்து மைல் தொலைவில் பம்மைமடு இருக்கிறது.

## அரிசி ஆலே...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படும் இளைஞர் இராணுவத்தினரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

அரிசி ஆலையில் இருந்தபோதே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## சனப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைக் கூட்டணியினர் பதவியிழந்தனர். அதன் பின்னர் பல அமைச்சர்கள் உருவாகினர். அமைச்சர் எம். எச் மொகமதுக்கு பல அமைச்சுக்கள் வழங்கப்பட்டன. அவரது பெயர் 'கின்னஸ்' புத்தகத்தில் இடம்பெறவேண்டும்.

இஸ்ரேலியரைக் கொண்டுவந்து பாதுகாப்புப் படையினருக்குப் பயிற்சியளிக்கப்படுகின்றது. அப்படியாயின் அமைச்சர் முஸ்லிம் விவகாரங்களை எப்படிக் கவனிக்க முடியும்? நீங்கள் அரபு நாடுகளிடம் எப்படி முகம்கொடுப்பீர்கள்? இதனால் இந்த அமைச்சர் தமது பொறுப்பிலிருந்து ராஜினாமாச்செய்ய வேண்டும். அப்போதுதான் முஸ்லிம் விவகாரங்களைத் திறமையாகச் செய்யமுடியும்'' என்றார்.

## இருவர்..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வைத்து கடத்தப்பட்ட லொறி ஒன்றை அப்பகுதியிலுள்ள காட்டுப்பகுதியில் மதவாச்சிப் பொலிசார் கண்டுபிடித்துள்ளது தெரிந்ததே.

இது சம்பந்தமாக பொலிசார் விசாரணை மேற்கொண்டபோது ஊர்காவல்படையைச் சேர்ந்தவர்களே இந்தலொறிக் கடத்தல் சம்பவத்தில் ஈடுபட்டதாகத் தெரியவந்துள்ளதாம். (ரா-மா)

## ஈ. தே. முன்னணி....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இலங்கை அரசு மீண்டும் தானாகவே செய்துகொண்டுள்ள போர் நிறுத்த உடன்பாடு மூலம் தாம் சமாதானத்துக்குத் தயாராக இருப்பதாக ஒரு தவறான கருத்தினைப் பரப்பத் திட்டமிட்டுச் செயற்படுவதாகவும், இலங்கை அரசாங்கம் சமாதானத்தை விரும்புவது உண்மையானால் அங்கு நிலவும் உண்மை நிலைமைகளை அறிவதற்காக செஞ்சிலுவைச் சங்கம் அல்லது அதைப் போன்ற ஒரு அமைப்பை அனுப்பிவைக்க வேண்டுமென்று ஈழம் தேசிய விடுதலை முன்னணி விடுத்த கோரிக்கை ஏன் நிராகரிக்கப்பட வேண்டுமென்றும் மேற்படி அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது

போர்நிறுத்த உடன்பாட்டை மீண்டும் அமுல்செய்த தினத்தன்று திருகோணமலையிலுள்ள நிலாவெளியில் இலங்கை இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கையும் கருத்தில் கொள்ளவேண்டும் என்றும், போர்நிறுத்த உடன்பாட்டினைப் பயனுள்ள முறையில் அமுல்படுத்த விரிவான விதிகளையும், நிபந்தனைகளையும் வகுக்க வேண்டுமென்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரா)

## மட்டக்களப்பு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வம் இடம்பெற்றது:

மரணமடைந்தவர்களில் இருவரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது,

இதேவேளை களுவாஞ்சிக்குடியில் ஆயுதப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம்செய்த போது மூவர் கொல்லப்பட்டுள்ளனர்.

இ போ. ச. பஸ்ஸில் முகமூடி அணிந்த இருவருடன் சென்ற ஆயுதப்படையினர் சோதனை நடாத்தியபொழுது இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மூவர்பலியானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது (ரா மா)

## கொள்ளை!

(மன்னார்)

மடு ரயில்நிலையத்திலுள்ள ஜெனரேட்டர் இனந்தெரியாத நபர்களால் நேற்றுமுன் தினம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. (மா)


அமரர் வைத்திய பூபதி டாக்டர் வேலும்மயிலும் நினைவாக

**சுந்தரம் வேலும்மயிலும்!**

சுந்தரனின் வேலும் மயிலும் - எங்கள்
முற்தைய வினையைப் போக்கிடுமே
சுந்தரம் வேலும் மயிலும் - நீ
வந்திடு பிணியை நீக்குவையே!

மன்றங்கள் கல்விக் கூடங்களும்
வழிபடும் ஆலயச் சந்நிதியும்
தென்அல்லவை வடஅல்லவை இணைக்கின்ற
பாதையும் உன்பெயர் சொல்லுமையா!

அல்வாயூர்ச் செல்லையா விவேகானந்தன்

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

## காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை
# கொள்ளைபோன ஒரு பகுதி பொருள்கள் ஒப்படைப்பு!

(மாவிட்டபுரம்)

கடந்த ஒன்பதாம் திகதி காங்கேசன்துறை சிமெந்து ஆலையில் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களின் ஒரு பகுதி கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலை இயங்குவதற்கு இன்றியமையாத சாதனங்களாகக் கருதப்பட்ட பொருட்களே திருப்பி ஒப்படைக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து சிமெந்து பொதுத் தொழிலாளர்யூனியன் ஊழியர் பேரவை ஆகியன வெளியிட்டுள்ள அறிக்கையில் இப் பொருட்கள் மீண்டும் கிடைக்க உதவி செய்த அனைவருக்கும் நன்றி தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேற்படி கொள்ளையை ஆட்சேபித்து தொழிற்சாலையைச் சேர்ந்த சுமார் 3000 தொழிலாளர்கள் தொழிற்சாலை முன்றலில் மறியல் போராட்டம் நடத்தியது தெரிந்ததே.

## நிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வவனியா, திருமலை மாவட்டங்களில் அரச பயங்கரவாதத்தால் பாதிப்புற்ற மக்களுக்கு உதவும்முகமாகப் பல்கலைக்கழக, தொழில்நுட்பக் கல்லூரி, பாடசாலை மாணவர்களின் கூட்டமைப்பான உயர்நிலை மாணவர் ஒன்றியம் என்னும் அமைப்பு யாழ் மாவட்டத்தில் நிதி சேகரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றதென்று அந்த ஒன்றியம் தெரிவித்துள்ளது

இந்த ஒன்றியத்திற்கும் யாழ் பல்கலைக்கழக மாணவர் அவைக்கும் எவ்வித தொடர்புமில்லை என்றும் இந்த ஒன்றியம் தெரிவித்துள்ளது.

## வெலிக்கடை: 43-வது நாள்

(யாழ்ப்பாணம்)

"ஈழம் செய்திப் பலகையின் இன்றைய தகவல் இது:

வெலிக்கடைப் போராட்டம் 43வது நாளாக இன்று தொடர்கிறது. வெகுளித்தனமாக அரசு பொய் சொல்கிறது. சிறீலங்காவில் ஓர் 'உலக அதிசயம்' 'பூஸா' வதைமுகாம் திண்ணைகளில் கைதிகள் குளிர்ச்சி அடைந்துள்ளனர்.

வவனியா-மன்னார் வீதியில் பம்பமடுவில் வெறியாட்டம் கோவில், கடைகள், தீக்கிரை மக்கள் மத்தியில் துப்பாக்கிப் பிரயோகம், அகதிகளாக மக்கள் வெளியேற்றம்.

யாழ் நகரில் நேற்று ஒத்திகை நடந்தது. "ஒரு தலைப் பட்சமாக யுத்த நிறுத்தம்" என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

## பஸ் டிப்போவில் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபை யாழ். டிப்போவில் நேற்றுமுன்தினமிரவு, இனந்தெரியாத இளைஞர்களினால் இரண்டு பட்டறிகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன,

இரவு எட்டரை மணியளவில் வான் ஒன்றில் துப்பாக்கியுடன் வந்த இளைஞர்கள், இக்கொள்ளையை நடத்தியதாகக் கூறப்படுகிறது.

டிப்போவில் உள்ள ஊழியரை பயமுறுத்திவிட்டு அங்கு நின்ற வவனியா பஸ்ஸிலிருந்த 2 பாட்டறிகளை எடுத்துச் சென்றதாக கூறப்படுகிறது. (இ)

# 22 குடும்பங்களுக்கு சாரதா ஆச்சிர உதவி

(புலோலி)

அண்மையில் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியான வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த இருபத்திரண்டு பேரின் குடும்பங்களுக்குப் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் அரிசி, மா, சீனி போன்ற உணவுப்பொருட்களையும், உடுபுடவைகளையும் வழங்கியுள்ளது.

ஜேர்மனியில் இருக்கும் பருத்தித்துறையைச் சேர்ந்த சமூக சேவையாளரொருவர் அண்மையில் சேவாச்சிரம ஏழைகளுக்கு வழங்குவதற்கென சுமார் இருபிரம் ரூபா பெறுமதியான உடுபுடவைகளை அனுப்பி வைத்திருந்தார்.

# இந்த ஆசிரியர்களுக்கு தபால்மூலம் காசோலை

(யாழ்ப்பாணம்)

பாதுகாப்பான போக்குவரத்தின்மையால் மூன்றும் தவணைப் பாடசாலைக்குத் திரும்பமுடியாத சூழ்நிலையில் இருக்கும் சகல ஆசிரியர்களுக்கும் அவர்களது செப்டம்பர் மாத சம்பளத்தை அவர்களின் வீட்டு விலாசங்களுக்கு காசோலையாக அனுப்பி வைக்குமாறு சம்பந்தப்பட்ட கல்விப்பணிப் பாளர்களை கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு எம். பீ. வி. கிவ்வர பணித்துள்ளார்

இப்பணிப்புரை இவ்வாரம் சம்பந்தப்பட்ட கல்விப்பணிப் பாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதென்று மேலதிகச் செயலாளர் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச்செயலாளருக்கு தெரிவித்துள்ளார்,

தமது சம்பளத்தைப் பெறுவதற்காக ஆசிரியர்கள் 'டி' படிவங்களை தமது அதிபர்களுக்கு அனுப்புமாறு பாடசாலை அதிபர்கள் இல்லாத இடத்து பாடசாலை மூடப்பட்டிருந்தால் அல்லது அகதிகள் முகாமாக இருந்தால் சம்பந்தப்பட்ட கல்விப் பணிப்பாளர்களுக்கு ஆலோசனை வழங்குமாறும் தெரிவித்துள்ளார். என்று இலங்கைத் தமிழாசிரியர் சங்க பொதுச்செயலாளர் த. மகாசிவம் தெரிவித்துள்ளார். (ஈ)

# அந்த 'நல்ல சேவை' தொடருகிறது

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஆஸ்பத்திரியிலுள்ள சத்திரசிகிச்சைகூடத்திலிருந்து கடந்த ஞாயிறு இரவு இனந்தெரியாத நபர்களால் இரு பிராணவாயு சிலிண்டர்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ள போதிலும். அவை மீண்டும் அப்படியே ஒப்படைக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரி நோயாளர் நலன்கருதி தமது வேண்டுகோளை ஏற்று கொள்ளையடித்துச் சென்ற இருபிராணவாயுச் சிலிண்டர்களையும் மீண்டும் ஒப்படைத்தமைக்காக தெல்லிப்பழை ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே. கதிரவேற்பிள்ளை பாராட்டுத்தெரிவித்துள்ளார்.

அத்தியாவசியமான வைத்தியமனை போன்ற சேவைத் தலங்களில், இவ்வாறான கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெறுவது பொதுமக்களைப் பாதிக்குமென்றும் எதிர்காலத்தில் இது போன்ற நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டவர்கள் ஈடுபடாமல் இருக்கவேண்டுமென்றும் வைத்திய அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார். (மா

# 110 மூடை அரிசி, 50 மூடை மிளகாய் கொள்ளை!

(வவனியா)

110 மூடை அரிசியும், 50 மூடை மிளகாயும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன!

வவனியாவிலிருந்து கொழும்பிற்குச் சென்ற தனியார் லொறி ஒன்றிலேயே இக்கொள்ளை இடம்பெற்றுள்ளது.

மதவாச்சி-அனுராமை எனும் இடத்தில் இந்தலொறிகட்டை போட்டு மறிக்கப்பட்டு, கொள்ளை நடந்துள்ளது. இந்த லொறியில் பயணம் செய்த மன்னாரைச் சேர்ந்த இளம் முஸ்லிம்பெண் ஒருவர் கொள்ளையரால் துன்புறுத்தப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

பொருட்கள் அபகரிக்கப்பட்ட பின்னர் லொறி வவனியா வந்தடைந்துள்ளது.

## இன்று

(நல்லூர்)

நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5-30 முதல் நாவலர் சபை ஆதரவில் திருமதி பராசக்தி சிவநாதனின் பண்ணிசைக் கச்சேரி நடைபெறும் ஸ்ரீ ஜே எஸ் சர்மா மிருதங்கமும், செல்வி கண்ணும்பா பாக்கியராஜா வயலினும் வாசிப்பர்.

## அடுத்த வாரம் ரயில் சேவை

(யாழ்ப்பாணம்)

'யுத்த நிறுத்தம்' நீடிக்கப் பட்டதைத் தொடர்ந்து வட பகுதி, கிழக்குப் பகுதிகளுக்கான ரயில் சேவைகள் அடுத்த வாரம் நடைபெறலாமெனத் தெரியவந்துள்ளது

இம்மாதம் 23ம் திகதி பாதுகாப்புச் சபை கூடி வட பகுதி கிழக்குப் பகுதிக்கான ரயில் போக்குவரத்துச் சேவைகள் குறித்து ஆராயவுள்ளது

3-வது டெஸ்ட்

## வெற்றி தோல்வி இல்லை

(கண்டி)

இந்திய - இலங்கை அணிகளுக்கிடையே கண்டி அஸ்கிரிய மைதானத்தில் நடைபெற்ற 3வது இறுதிக் கிரிக்கெட் டெஸ்ட் போட்டி எத்தரப்பிற்கும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளது.

இப்போட்டியில இந்தியா வெற்றிபெறும் வாய்ப்பைப் பெற்றிருந்தபோதும் வெளிச்சம் இல்லாத காரணத்தினால் ஆட்டம் முன்கூட்டியே நிறுத்தப்பட்டதினால் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளது.

இந்திய வீரர் மொகிந்தர் அமர்நாத், இலங்கை வீரர்கள் டுலிப் மெண்டிஸ், றோய் டயஸ் ஆகியோர் அடுத்த போட்டியில் "செஞ்சரிகள்" அடித்தனர்.

இறுதி ஸ்கோர்

இந்தியா—249, 5—325
இலங்கை—198, 7—307

---

## மரண அறிவித்தல்

### திருமதி சரவண முத்து சின்னம்மா

இருபாலை காலஞ்சென்ற மலாயன் பென்சனர் தம்பிப்பிள்ளை சரவணமுத்துவின் மனைவி சின்னம்மா காலமானார். அன்னார் பவளம், கமலாவதி ஆகியோரின் அன்புத் தாயாரும், கார்த்திகேசுவின் பெரிய தாயாரும், கே எஸ். அழகரத்தினம் (இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்), S. தாஸ் (அதிபர், அராலி இந்துக் கல்லூரி), விஜயலக்ஷ்மி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். ஈமக்கிரியைகள் 21-ம் திகதி சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு இருபாலை மயானத்தில் நடைபெறும்.

சரவணமுத்து இல்லம்,
முனிகோவிலடி, இருபாலை.

தகவல்: K. S. அழகரத்தினம்
S. தாஸ்

826

---

## சமாதிநிலை அறிவித்தல்

### சைவத்திரு கார்த்திகேசு பூசாரியார்



மலர்வு:
09-08-1910

சமாதி:
18-09 1985

ஏழாலை மத்தியில் கோவில் கொண்டு அருள் புரியும் கண்ணகை அம்பாள் ஆலய பூசகர் சைவத்திரு கார்த்திகேசு பூசாரியார் அவர்கள் 18 9-1985ல் சமாதிநிலை எய்திவிட்டார்கள்.

இவ்வடியவர் இவ்வாலய கர்த்தரும் முதற் பூசகருமாகிய இராசாப்பூசாரியாரின் சகோதரரும், தங்கம்மாவின் அன்புக்கணவரும், சுந்தரலிங்கம், திருமதி பரமேஸ்வரி சிவலிங்கம் ஆகியோரின் தந்தையுமாவார்

திருவுடலப் பிரதிட்டை வைபவம். இன்று 20-09-1985 வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெறும் கிரியைகளை அடுத்து ஊர்வலம் ஏழாலைக் கிராமத்தின் பிரதான வீதிகளினூடாக எடுத்துச்செல்லப்பட்டு அம்பாள் ஆலய வீதியில் மாலை 4-00 மணியளவில் சமாதி வைக்கும் வைபவம் நடைபெறும்.

தகவல்: த திருஞானசம்பந்தர்
ஏழாலை மத்தி, ஏழாலை.

814

---

## இலங்கை ஆசிரியர் காங்கிரஸ்
## யாழ் கிளைக்காரியாலயத் திறப்புவிழா

21—09—85 சனிக்கிழமை 12 மணியளவில் 148/1, ஸ்ரான்லி வீதியில் உள்ள பட்டப்படிப்புக் கல்லூரியில் நடைபெறும். சகல ஆசிரியர்களும் சமூகமளிக்கவும்.

க. சிவஞானம்,
பொதுச்செயலாளர்.

824

---

## உருக்கமான வேண்டுகோள்

கடந்த 09-09-85 திங்கட்கிழமை இரவு 8 மணியளவில் எமது வீட்டிற்கு மூன்று வாலிபர்கள் வந்து ஓர் இயக்கத்தின் பெயரைச் சொல்லி எனது 83 ஸ்ரீ 643 இலக்கமுள்ள சிவப்பு நிற CG 125 ஹொண்டா (வட்ட வயிட்) மோட்டார் சைக்கிளை மறுநாள் திருப்பித் தருவதாகக் கூறி எடுத்துச் சென்றார்கள்: இன்று வரை மோட்டார் சைக்கிள் கைக்கு வந்து சேரவில்லை. எமது போக்குவரத்துக்கு மிக அத்தியாவசியமாகத் தேவைப்படும் இந்த மோட்டார் சைக்கிளைத் திருப்பி என்னிடம் ஒப்படைக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

வை. விவேகானந்தன்,
216, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (808)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் மேற்கு வீதி. 68-ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number B 10036/81. Eelanadu P. O. Box: 49, Telegram: Eelanadu Telephone: 22389 — 24126